C.C No. 188/2010 10.06.2026

**PW2**. கிரேஷ் சோபியா பாய் த/பெ. அருனால்டு சாலமன்
எதிரிதரப்பில் குவிமுச பிரிவு 311ன்கீழ் மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டு, சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு குறுக்குவிசாரணை
**எதிரிகள் ஆஜர்.**
**(சாட்சி சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு சாட்சி விசாரணை பதிவு செய்யப்பட்டது ).**

**எதிரிகள்தரப்பில் குறுக்குவிசாரணை**

இவ்வழக்கின் புகார்தாரர் எனது தாயார் என்றால் சரிதான். மேலூர் உட்பிரிவில் அனைத்து காவல் நிலையத்திலும் சார்பு ஆய்வாளராக பணியாற்றியுள்ளேன் என்றால் கொட்டாம்பட்டி மற்றும் மேலவளவு காவல் நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணியாற்றி உள்ளேன். வழக்கு கால கட்டத்தில் மேலவளவு காவல் நிலையத்திற்கும், மேலூர் காவல் நிலையத்திற்கும் ஒரே காவல் ஆய்வாளர் என்றால் சரிதான். வழக்கு சம்மந்தமாக நேரடியாக எதுவும் தெரியாது என்றால் சரிதான், எனது தாயார் போன் மூலம் தகவல் சொல்லி தெரிந்துகொண்டேன். இவ்வழக்கின் புகார் யாரால் எழுதப்பட்டுள்ளது என்றால் எனது தாயார் மல்லிகா புளேராவால் எழுதப்பட்டது. என்னிடம் காட்டப்படும் புகார் மனுவில் உள்ள அனுப்புநர் என்ற இடத்தில் மல்லிகா புளோரா வதி என்று எழுதப்பட்டுள்ளது, கையொப்பம் மல்லிகா என்று கையொப்பம் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். எப்பொழுதும் எனது தாயார் ஆங்கிலத்தில் கையொப்பம் செய்வார் என்றால் சரிதான். எனது தாயார் அவரது புகார் மனுவில் எந்த கடைக்கு சென்றார் என்ற விவரத்தை சொல்லவில்லை என்றால் பாத்திரக்கடை என்று புகார் கொடுத்ததாக நினைவு உள்ளது. எனது தாயார் எந்த மாடல் செயின் அணிந்திருந்தார் என்ற விவரம் தெரியுா என்றால் முருக்கு செயின். என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் உள்ள வழக்கு சொத்தானது பள்ளு, பள்ளாக உள்ளது என்றால் சரியல்ல, முருக்கு செயினாக உள்ளது. முருக்கு செயின் எவ்வாறு இருக்கும் என்றால் சுருள், சுருளாக இருக்கும். இப்புகைப்படத்தில் காட்டும் செயின் அவ்வாறு இல்லை என்றால் சரியல்ல. நான் சொன்னதுபோல் எந்த சம்பவமும் நடைபெறவில்லை, இவ்வழக்கில்

எதிரிகளிடமிருந்து வழக்கு சொத்தை கைப்பற்றப்படவில்லை, புகார்தாரர் தவறுதலாக தொலைந்த பொருளுக்கு வேறு வகையில் பெருவதற்காக எதிரிகள் மீது தவறுதலாக எனது அதிகாரத்தை பயன்படுத்தி வழக்கு பதிவு செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும், இந்த வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல. என்ன யார் விசாரித்தார்கள் என்றால் காவல் ஆய்வாளர் பாலாஜி விசாரித்தார். நான் சொன்னதுபோல் என்னை யாரும் விசாரிக்கவில்லை, எதிரிகளுக்கும், இந்த வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல.